அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2021/2022
## தமிழ் - ஆண்டு 12

| நாள்: சனிக்கிழமை | பெயர்: |
|---|---|

## புலன்மொழித் தேர்வு

### கேட்டலும் விளங்கிக்கொள்ளுதலும்

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்படும் உரைப்பகுதியைக் கேட்டு, விளங்கிக் கொண்டு, கீழ்க்காணும் கூற்றுகள் சரியாயின் ✓ எனவும், பிழையாயின் ✕ எனவும் கட்டத்தினுள் அடையாளமிடுக.**

1. தமிழர் இந்தியா முழுவதிலும் பரந்து வாழ்ந்தமையை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. ☐

2. இன்றைய ஈரான், ஈராக், ஆப்கானித்தான் நாடுகள் சிந்துவெளிப் பகுதிகளாகும். ☐

3. கைபர் கணவாய் ஊடாக ஆரியர் சிந்துவெளியை வந்தடைந்தனர். ☐

4. சிந்துவெளிப் பகுதிகளில் தமிழர் நாகரிக வளர்ச்சியுடன் வாழ்ந்தனர். ☐

5. சிந்துவெளிக்கு வந்த ஆரியர் சிறப்புற வாழ்வதற்குத் தமிழர் வாய்ப்பளித்தனர். ☐

6. ஆரியர் தமிழரை ஆளுகை செய்து அடிமைப்படுத்தத் தொடங்கிய இடம் சிந்துவெளி. ☐

7. தமிழர் ஆரியரின் அடக்குமுறையின் கீழ் வாழ விரும்பினர். ☐

8. தமிழர் மூவேந்தரின் ஆட்சியின் கீழ் வாழத்தொடங்கினர். ☐

(8 x ½ = 4 புள்ளிகள்)

## ஆ - பகுதி

**ஒலியிறுவெட்டில் ஒலிக்கப்படும் நேர்காணற்பகுதியைக் கேட்டு, விளங்கிக் கொண்டு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தமிழர் வாழ்வில் ஆரியரின் ஊடுருவலால் மாற்றம் ஏற்பட்டுள்ளவற்றுள் இரண்டினை எழுதுக.

______________________________

______________________________

2. தமிழகம் யாருடைய ஆட்சியில் வளமுடன் விளங்கியது?

______________________________

______________________________

3. ஆரியரின் பேச்சுமொழியை எழுத்துமொழி எனும் நிலைக்கு உயர்த்தியவர்கள் யார்?

______________________________

______________________________

4. ஆரியருடைய கோவில் வழிபாட்டுக்காகச் சமற்கிருத மொழியில் மொழிபெயர்க்கப்பட்டவை எவை?

______________________________

______________________________

5. இராசராசசோழன் என்ற மன்னனின் தமிழ்ப்பெயர் என்ன?

______________________________

______________________________

6. இன்று தமிழ்மொழியில் எந்த மொழியின் மேலாண்மை ஓங்கி வருகிறது?

______________________________

______________________________

**(6 x 1 = 6 புள்ளிகள்)**